தமிழ்நாடுஅரசு
2018

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

**தமிழ்நாடுஅரசுஅரசிதழ்**
**அசாதாரணம்**

**அதிகாரப்பூர்வவெளியீடு**

எண். 120 சென்னை,புதன்கிழமை, மார்ச்28, 2018

பங்குனி14,ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2049

---

**பாகம் ஆ– பிரிவு 2**

## ஒருபிரிவுபொதுமக்களின் நலன் கருதிதலைமைசெயலகத் துறைகளால்வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்அல்லதுஆணைகள்

## அரசின் அறிவிக்கைகள்

### வணிகவரிகள்மற்றும் பதிவுத்துறை

தமிழ்நாடுசரக்குகள்மற்றும் சேவைகள்வரிசட்டம், 2017 ன் கீழ்மொத்தவருவாய்
1.5 கோடி ரூபாய்வரைகொண்டபதிவுசெய்யப்பட்டநபர்களுக்கு திருப்பிச் செலுத்தும் முறை

*[அ.நி. எண்.43 வணிகவரிகள்மற்றும் பதிவு[(ஆ1)28மார்ச் 2018 ]*
*பங்குனி14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு– 2049]*

**எண். II(2)/வவப/316(அ)/2018**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள்வரி சட்டம் 2017–ன் (2017ன் தமிழ்நாடு சட்டம் 19ல்) பிரிவு 148–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, கவுன்சிலின் பரிந்துரையின்பேரில் தமிழக ஆளுநரால், முந்தைய நிதி ஆண்டு அல்லது தற்போதைய நிதியாண்டில் மொத்த வருவாய் 1.5 கோடி ரூபாய் வரை கொண்ட பதிவு செய்யப்பட்ட நபர்களே சரக்குஅல்லது சேவைகளின் வெளிப்புற விநியோகங்களின் விவரங்களை வழங்குவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நடைமுறைகளை பின்பற்றக்கூடிய, பதிவு செய்யப்பட்ட நபர்களின் வர்க்கம் என அறிவிக்கப்படுகிறது.

2. 2018 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருட்கள்அல்லது சேவைகள்அல்லது இரண்டின் வெளிப்புற விநியோகங்களின் விவரங்களை 2018ஆம் ஆண்டின் ஜூலை 31ஆம் தேதி வரை வழங்கலாம்.

3. 2018ஆம் வருடம் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மாதங்களுக்கு விதி 38 துணை விதி (2) மற்றும் விதி 39 துணைவிதி (1)ன் படி சிறப்பு நடைமுறை அல்லது நமுனாவில் விவரங்களை தெரிவிப்பதற்கான காலக்கெடு நீட்டிப்பு அரசிதழில் பின்னர் அறிவிக்கப்படும்.

கா.பாலசந்திரன்,
(கூடுதல்தலைமைசெயலாளர்).